விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 291 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 19 வியாழக்கிழமை (06.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### முல்லையில் பதற்றம்

# மீனவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டதால் அங்கு கடும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

04 ஆம் பக்கம் பார்க்க



## யாழ். நகரில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


யாழ்ப்பாணம் கொட்டடி லைடன் சந்திப் பகுதியில் யாழ்ப்பாண நகரில் இருந்து கொட்டடி நோக்கி வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின்

11

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்
# இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பு இன்று

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் மீதான வாக்கெடுப்பு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.



பிரித்தானியா தலைமையிலான சில முக்கிய நாடுகள், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இறுதி வரைவை முன்வைத்துள்ளன.

30 நாடுகளின் இணை அனுசரணையுடன் பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்து இந்த வரைவை முன்வைத்துள்ளன.

எவ்வாறாயினும், இலங்கை அதனை எதிர்க்கும் எனவும், வரைவிலுள்ள சர்வதேச

11

## யாழ். பல்கலையின்
### 36 ஆவது பட்டமளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று, நாளை, நாளை மறுதினம் ஆகிய மூன்று தினங்களும் பட்டமளிப்பு விழா நடைபெறும்.

11

### கரவெட்டியில்
## வயோதிபர்களிடம் நகை கொள்ளை

(கரணவாய்)

தனிமையில் இருந்த வயோதிப தம்பதியினரை கத்தி முனையில் அச்சுறுத்தி அவர்களிடமிருந்த ஐந்து பவுண் தங்க நகை

11

## இலங்கையின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிட வேண்டாம்
### ஐ. நாவில் அலி சப்ரி குற்றச்சாட்டு

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது நாட்டின் உள் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றம் சாட்டியுள்ளார்.

பொருளாதார குற்றங்களுக்கு யாரேனும் பொறுப்புக் கூறினால் அவர்கள் மீது நாட்டின் சட்டத்தின்படி நட

11



### 271 ரூபாயினால்
## எரிவாயு விலை குறைக்கப்பட்டது

(கொழும்பு)

லிட்ரோ வீட்டு சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலையை லிட்ரோ எரிவாயு நிறுவனம்

11

## இலங்கை தொடர்பான மற்றுமொரு பிரேரணை
### ஐ. நாவில் இன்று சமர்ப்பிப்பு

(ஜெனிவா)

இலங்கை தொடர்பான மற்றுமொரு பிரேரணை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பலம் வாய்ந்த நாடுகள் கூட்டாக இந்த பிரேரணையை சமர்ப்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர்

11

### கடன் நிவாரணம்
## இலங்கைக்கு வழங்க வேண்டும்
### மன்னிப்புச் சபை

(கொழும்பு)

இலங்கை மக்கள் பட்டினி, மோசமான வறுமை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள

11

## மானிப்பாயில் ஆசிரியரின் சங்கிலி வழிப்பறி
### மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் வீதியை வழிமறித்து கத்தியை காண்பித்து மிரட்டி ஆசிரியரின் நான்கரை பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில்
2 பரப்பு காணி விற்பனைக்கு

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:-
காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(13017)

**076 755 8606**


# பாடசாலையில் மாணவி துன்புறுத்தல்

(கொழும்பு)

பாடசாலை நூலகத்தில் வைத்து 12 வயது மாணவி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மொரட்டுவ நகரின் மத்தியில் அமைந்துள்ள மாதிரி பாடசாலையில் 7ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவரே இந்த அசம்பாவித சம்பவத்திற்கு முகம் கொடுத்துள்ளார்.

குறித்த மாணவி புத்தகம் எடுப்பதற்காக நூலகத்திற்குச் சென்றபோது, நூலகப் பொறுப்பாளர் மாணவியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில்
9 பரப்புக் காணி விற்பனைக்கு

- A9 வீதியிலிருந்து 200M தூரம்
- 20 அடிப் பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும்
- பார்வையிடும் நேரம் -
காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை

(13017)

**077 874 8135**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




06.10.2022 உலக ஆசிரியர் நாளில்
கல்வி அமைச்சில் நடைபெறும்
**"குரு பிரதிபா பிரபா"** விருதினைப்
பெற்றுக்கொள்ளும் எமது
வித்தியாலய ஆசிரியை

**திருமதி**
**பிரியாசக்தி**
**கிருபாலன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில்
மகிழ்வும் நிறைவும் அடைகிறோம்
அவரது ஆசிரிய சேவைக்காலம்
மென்மேலும் சிறப்புப் பெறவும்
மாணவ உலகிற்கு உயரிய
சேவையை வழங்கவும்
இறைவனைப்
பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

(C-5036)

கல்விச் சமூகம்
கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்




(C-5039)

### கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில்
### வாண்மை விருத்தியால் சிறப்படைந்த கல்வியியலாளர்களைப்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பட்டப்பின் கல்வி
முகாமைத்துவ டிப்ளோமா
திரு.சுதந்திரன் சுதாகரன் SLPS III
B.A (Hons)., PGDE., M.Ed., PGDEM



கல்விமாணி
திருமதி ரஞ்சினிதேவி
சிவசபேசன் SLTS I
Trained Teacher (Commerce), B.Ed.



கல்வியியல் முதுமாணி
திரு.சுந்தரம் குகநேசன் SLTS I
B.Sc., PGDE., M.Sc (Phy)., M.Ed.



கல்வியியல் முதுமாணி
திரு. செல்லையா
இளங்கோ SLTS I
B.Sc., PGDE., M.Sc (Sc.Ed.)



கல்வியியல் முதுமாணி
திருமதி நளாயினி
கிருஸ்ணமூர்த்தி SLTS I
B.BA., PGDE., M.Ed.



வீரசூரிய விருது – 2018
திரு. பெரியதம்பி
இராஜமனோகரன் SLPS 2 II
Trained Teacher (Physical Education)



கல்விமாணி
திருமதி உதயமலர்
இராஜேஸ்வரன் SLTS 2 II
Trained Teacher (Science), B.Ed.



கல்வியியல் முதுமாணி
திருமதி தனுஷியா
முரளிதரன் SLTS I
B.A (Hons)., PGDE., M.Ed.



Dip.in.TESL
திருமதி தர்சினி
வைகுந்தன் SLTS 2 I
B.CA., PGDE., Dip.in.TESL

(12999)

Congratulations!

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
கல்லூரி சமூகம், யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்அட்டைப் பண்ணைகளால் கடல் உணவுகள் அழிவடையும்

## கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடா கடலில் அதிகரித்துவரும் கடல்அட்டைப் பண்ணைகளால் சில வருடங்களில் யாழ்ப்பாண மக்கள் தமக்குத் தேவையான கடல் உணவைப் பெற முடியாத நிலைக்கு தள்ளப் படுவார்கள் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடாக் கடலின் பரப்புக் கடல்களை இலக்கு வைத்து அட்டைப் பண்ணைகள் பெருகுவதால் மீன்கள் உற்பத்தியாகும் இடங்கள் தடுக்கப்படுவதோடு நீரோட்டங்களும் தடுக்கப்படுகிறது.

நாங்கள் அட்டைப்பண்ணைக்கு எதிரானவர்கள் அல்ல பண்ணை அமைக்கும் போது கடலை மாசுபடுத்தாமலும் மீன் இனங்கள் பெருகக்கூடிய பகுதிகளை விடுத்து அட்டைப் பண்ணைகளை அமைக்க வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சரிடம் நாம் வினயமாக கேட்டுக் கொள்வது எமது மீன்பிடித்தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் அட்டைப் பண்ணைகள் மற்றும் கடலை மாசுபடுத்தும் பண்ணைகளை அகற்ற வேண்டும். மேலும் எமது கடல் வளம் எமது மக்களுக்கே பயன்பட வேண்டும் அவ்வாறில்லாமல் அட்டைப் பண்ணை என்ற போர்வையில் எமது கடலை நாசப்படுத்துவதை தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-104)



அருணலு பரிசளிப்பு வைபவம் 2021 நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளையில்கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது 29 மாணவர்கள் பரிசில்களைப் பெற்றனர்.

(படம்:-மகாலிங்கம்)

ஜே-62 கொழும்புத்துறை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள யாழ். கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தில் பாடசாலைச் சிறுவர்களின் போஷாக்கினை மேம்படுத்தும் முகமாக யாழ்ப்பாணம் பிரதேச செயலரின் எண்ணக் கருவிற்கு அமைய பசுப்பால் வழங்கும் செயற்றிட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



(படம்:-ரவிசாந்)

# நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுப் பதாகைகள்




(குப்பிழான்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படவுள்ள உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.நீரிழிவுக் கழகத்தால் யாழ்.நகரின் பல பகுதிகளிலும் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி பதாகைகளில் நின்று கொல்லும் நீரிழிவு நோய் வராதிருக்க சோறு மற்றும் மாப் பொருட்களை அளவாக உண்போம், மெதுவாகக் கொல்லும் சீனிப் பண்டங்கள், பானங்களைத் தவிர்ப்போம், மரக்கறி வகைகளை அதிகமாக உண்போம், தினமும் 30 நிமிடங்கள் நடைப் பயிற்சி செய்வோம், மன அழுத்தம்அற்று வாழ்வோம்எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-18)

# காலபோக நெற்செய்கை ஆரம்பம் கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பினர் கடந்த 1 ஆம் திகதி காலபோக நெல் விதைப்பினை ஆரம்பித்திருப்பதால் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டுமென எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அண்மையில் இடம்பெற்ற காலபோக கூட்டத்தில் 25.09.2022 தொடக்கம் 27.02.2023 வரை கால்நடைகளை கட்டுப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே கால்நடை வளர்ப்போர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கால்நடைகளை கட்டுப்படுத்த தவறி பயிர்களுக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில் மாடு ஒன்றிற்கான பிடி கூலி மூவாயிரம் ரூபாய்,நாள் ஒன்றிற்கான பராமரிப்புத் தொகை 500 ரூபாய் மற்றும் குற்றப்பணம் 500 ரூபாய் ஆகியவற்றை செலுத்திய பின்னரே கால்நடைகளை மீட்க முடியும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (4-30)

## யாழ். மாநகர சபைக்கு

# நொதேன் மருத்துவமனையால் தீயணைப்பு வாகனம் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

நொதேன் தனியார் மருத்துவமனை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் யாழ். மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

நொதேன் தனியார் மருத்துவமனையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் குறித்த தீயணைப்பு வாகனம் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் நொதேன் தனியார் மருத்துவமனை நிர்வாகத்தினர், யாழ்.மாநகர முதல்வர், யாழ். மாவட்ட செயலர், யாழ். மாநகர ஆணையாளர், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் யாழ். வணிகர் கழக பிரதிநிதிகள், தீயணைப்புப் படை பிரிவு உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலநது கொண்டனர். (4-33)

# மானிய உர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளன பிரிவிற்குட் பட்ட விவசாயிகளுக்கு 1 ஆம் கட்ட மானிய உர விநியோகம் இன்று வியாழக்கிழமை கைதடி கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்படவுள்ளது.

எனவே ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டு, அடையாள அட்டை, சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றைக் கொண்டு வருமாறு சம்மேளன செயலாளர் அறிவித்துள்ளார். (4)



நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நவராத்திரி கும்பபூஜை இறுதி நாளான நேற்று காலை மானம்பூ உற்சவம் (வாழைவெட்டு) இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

# சாவகச்சேரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு

## எதிர்வரும் திங்கள் முதல் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் சி.குமரவேள் தலைமையில் இடம்பெறவுள்ள திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன கலந்து கொள்ளவுள்ளார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்கள்...

சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று மூன்றாவது நாளாக முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு முன்பாக போராடிவரும் நிலையில் நேற்று காலை சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இன்னொரு மீன்பிடி தொழிலாளர்கள் இவர்கள் மீது தாக்குதலை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டதோடு தொடர் போராட்டம் இடம்பெறும் இடம் நோக்கி வரவும் முயற்சி செய்த நிலையில் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி அவர்களை கலைத்திருந்தனர்.

மேலும் அங்கு ஏற்பட்ட பதற்றத்தை கட்டுப்படுத்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## இருவர் மரணம்

நாட்டில் மேலும் 2 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர்களில் 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட பெண் ஒருவரும், 60 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் மேலும் 7 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். (ம-7)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 . 07 . 1937

இறப்பு 17 . 10 . 2021

### அமரர் இராசம்மா இராமலிங்கம்
(அம்மாக்கா)

திதி : பூர்வபக்க துவாதசி

*ஐயிரண்டு திங்கள் எமைச் சுமந்தாய் அம்மா*
*ஆறிரண்டு திங்கள் ஆனதம்மா எமை பிரிந்து சென்று*
*எத்தனை திங்கள் வந்து சென்றாலும் உம் நினைவுகளை*
*உயிருள்ளவரை சுகமாக சுமந்திருப்போம் அம்மா.*

(C-5040)

ஈவினை
புன்னாலைக்கட்டுவன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 22 05 1945

இறப்பு 07 09 2022

சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கத் தலைவர்
திரு. நா. விக்னேஸ்வரன் அவர்களின் அன்புத் துணைவியார்.

அமரர்

### சிவானந்தமலர் விக்னேஸ்வரன்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து
துயரடைகிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிப்
பிரார்த்தனை செய்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(13016)

சுதுமல்ல இந்து சமய
விருத்திச் சங்கம்

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து நவராசா
(நவரசிங்கம்)

**தோற்றம் : 1949.08.04 மறைவு : 2022.10.05**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கரவெட்டியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து நவராசா (நவரசிங்கம்) அவர்கள் நேற்று (05.10.2022) புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பேரின்பம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சுகந்தினி (சுவிஸ்), கணேஸ்குமார் (சுவிஸ்), நந்தினி (சுவிஸ்), தர்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரன் (சுவிஸ்), கிருபாஜினி (சுவிஸ்), றிச்சர்ட் புஸ்பாகரன் (சுவிஸ்), தர்மராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராஜஇராஜேஸ்வரி (பிரான்ஸ்), யோகேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரன் (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், சரோஜினிதேவி, பாலசுப்பிர மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரணி (சுவிஸ்), சாருசன் (சுவிஸ்), ஆகாஷ் (சுவிஸ்), அபினேஷ் (சுவிஸ்), சந்தோஷ் (சுவிஸ்), ரிஷி (சுவிஸ்), ஷாலினி (சுவிஸ்), ரோகினி (சுவிஸ்), தரன் (சுவிஸ்), ஷாயினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.10.2022) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் கரவெட்டியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-5042)

புதுறோட், கரவெட்டி.
075 881 7083,
+41629615474

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நடைபெற்ற
# மனித உரிமை மீறல்களுக்கு விரிவான பொறுப்புக்கூறல் அவசியம்
## கோர் குழு வலியுறுத்து

(ஜெனிவா)

**விடுதலைப்புலிகள் உட்பட அனைத்து தரப்பினராலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறை அவசியம் என கோர் குழு வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக 19 அம்ச தீர்மானத்தை முன்வைத்து கோர் குழு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

உயர்ஸ்தானிகர் அலுவலகம் மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாட்டை வரவேற்ற குறித்த குழு அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருளில் தட்டுப்பாடு, அத்தியாவசிய மருந்துப் பற்றாக்குறை மற்றும் வீட்டு வருமானம் குறைப்பு போன்றவற்றின் விளைவாக பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் தாக்கம் பற்றி கோர் குழு கவலை வெளியிட்டுள்ளது.

போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறை, கைதுகள் மற்றும் அரசாங்க ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறை, இதன் விளைவாக ஏற்பட்ட மரணங்கள், அழிவு மற்றும் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக சுயாதீன விசாரணை அவசியம்என்றும்வலியுறுத்தியுள்ளது.

இராணுவமயமாக்கல் நடவடிக்கை, முக்கிய நிறுவனங்களின் சுதந்திரம், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு தொடர்பாகவும் கோர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகளின் பாரதூரமான மீறல்களுக்கான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ள குறித்த நாடுகள் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச் செயல்களுக்கும் உடனடி முழுமையான மற்றும் பக்கசார்பற்ற விசாரணை அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயற்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் ஊழல்களை விசாரிப்பது உட்பட, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி)

# உலக சந்தை நிலவரத்திற்கேற்ப எரிபொருள் விலை மாற்றமடையும்
## அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)



உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவதற்கேற்ப அடுத்த இரண்டு வாரங்களில் எரிபொருள் விலை மேலும் குறைக்கப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கின்ஸ் நெல்சன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைப்பைத் தொடர்ந்து தேசிய மட்டத்தில் எரிபொருள் விலையை தீர்மானிக்க முடியாது.

பெற்றோல் இறக்குமதியில் இலாபம் கிடைக்கப் பெற்றதால் விலை குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் சிக்கல் காணப்படுகிறது என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

மசகு எண்ணெய் ஊடாக மாத்திரம் நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. மொத்த எரிபொருள் தேவையின் 30 சதவீதமளவு மாத்திரம் தான் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகிறது.

70 சதவீதமளவு எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கான விமான சேவைகளை அதிகரிக்கிறது இந்தியா-ஹரின்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகளை அடுத்த மாதம் முதல் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு பல நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (நி)

# மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் இலங்கையை அவதானிக்கும் பிரித்தானியா

(லண்டன்)

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக பிரித்தானியா தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானம் செலுத்தும் என்று பிரித்தானியாவின் இராஜாங்க அமைச்சர் ஜீஸ் நோர்மன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முக்கிய படைத்தரப்பு அதிகாரிகளுக்கு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை கண்காணிப்பில் வைத்திருப்பதற்கான சிறந்த பொறிமுறை பிரித்தானியாவிடம் உள்ளது. தொடர்ந்தும் இலங்கை தமது பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கை தொடர்பான இறுதி வரைவு ஜெனிவாவில் சமர்ப்பிப்பு

(ஜெனிவா)

ஐக்கிய இராச்சியம் தலைமையிலான முக்கிய நாடுகள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இறுதி வரைவை முன்வைத்துள்ளன.

30 நாடுகளின் இணை அனுசரணையுடன் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்து இந்த வரைவை முன்வைத்துள்ளன.

இதேவேளை, இலங்கை தொடர்பான இறுதிவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை நேற்று பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டி உரையாற்றினார். (நி)

# இராசிபலன்

06.10.2022
புரட்டாதி 19, வியாழக்கிழமை
ஏகாதசி முற்பகல் 9.20 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 8.14 மணிவரை

சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - புனர்பூசம்

வளவன்




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அன்பு நண்பர்களின் ஆதரவுண்டு.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




தொழிலில் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.




பகை விலகி பாசம் கூடும் நாள், செய்தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான நாள்.




நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.


வீணாக உன்னை [illegible] உள்ளாக்கிக் கொள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## Dr.C.W.W.Kannangara
### (Father of free Education)



School Children are very grateful of this distinguished SriLankan Dr. C.W.W. Kannangara. Due to his valiant efforts school children enjoy free education, free school books and free school uniforms.

Christopher William Wijekoon Kannangara was born on the 18th of October in 1884 in Ambalangoda. His parents were Mr. John Daniel Wijekoon and Mrs. Emalin Wijekoon.

After completeing his primary education at Weslian College Ambalangoda, young Kannagara entered Richmond College, Galle. After the Completion of his school education he became a teacher. He served at Richmond, Prince of Wales and Wesley Colleges; Mr. Kannangara received his higher education at the law college and became a lawyer. In 1931, he became a member of the state council. he was the minister of education. Village children were offered the opportunity to receive free education from primary to the univer sity level.

Central Colleges were established throughout the country. In 1943, Father of free education Mr. C. W. W. Kannangara received a doctorate from the university of Colombo.

Dr.C.W.W.Kannangkara who rendered a great service to the education of sri Lanka's bade farewel to the nation on the 22nd of September in 1969.

## ஆசிரியர் தின பொன்மொழிகள்

- ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்.
  -ஹெர்பர்ட்
- நான் உயிரோடு இருப்பதற்கு, என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டி ருக்கிறேன்.
  - மாவீரன் அலெக்ஸாண்டர்
- யாரிடம் கற்கிறோமோ அவரே ஆசிரியர்; போதிப்பவர் எல்லாம் ஆசிரியர் ஆகார்.
  - கதே
- எந்தவொரு அறிவியலிலும் எந்தவொரு கலையிலும் அனுபவம் சிறந்த ஆசிரியர். -
  -மிகுவல் டி செர்வாண்டஸ்
- அனுபவம் சிறந்த ஆசிரியர். அவருடைய பாடங்களை நாங்கள் நன்றாக நினைவில் வைத்திருக்கிறோம்.
  -ஜேம்ஸ் ஃபெனிமோர் கூப்பர்
- ஆசிரியரின் பெருமைகள் அனைத்தும் மாணவர்களி டமும் அவர் விதைத்த விதைகளின் வளர்ச்சியிலும் உள்ளன.
  - டிமிட்ரி மெண்டலீவ்

"மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலங்குவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"
—பாவேந்தர் பாரதிதாசன்—

# சிலப்பதிகாரம்

## சிலம்பினுள்ளே...

அங்கே மட்டுமின்றி மூவேந்தர்களின் ராஜ் யத்திலும் பெயரைச் சொன்னாலே எல்லோ ருக்கும் தெரிந்திருக் கும் வணிகர் மாசாத் துவான்.

அப்படிப்பட்ட பெருமை மிகுந்தவ ருக்கு மகனாகப் பிறந் தவர் என் கணவர் கோவலன். வணிகம் செய்வதற்காகப் பொருள் வேண்டி என் கால் சிலம்புகளில் ஒன்றை விற்பதற்காக உன்னுடைய மதுரை நகருக்கு வந்தது அவரது முன்வினைப்பயன். அவ ரைக் கள்வன் என்று குற் றம் சாட்டி நீ கொலை செய்துவிட்டாய். அந் தக் கோவலனின் மனைவி நான் என் பெயர் கண்ணகி. உன்னி டம் நீதி கேட்க வந்தி ருக்கிறேன் என்றாள்.




'பெண்ணே, கள்வ னின் உயிரைப் போக் குதல் கொலை ஆகாது அது அரச நீதி'

'அறநெறி தெரியாத அரசனே , எது அரச நீதி? எந்த ஆதாரமும் இல் லாமல் ஒருவனைக் கள் வன் என்று தீர்மானிப் பதா அரச நீதி? எதைக் கொண்டு அவரைக் கள்வன் என்று தீர்மா னித்தாய்?

'எதைக் கொண்டு?

கையும் களவும் என் பதை நீ கேட்டதில் லையா? கையில் கள வாடப்பட்ட சிலம்பு டன் ஒருவன் பிடிபடு கிறபோது தீர்மானிப் பதற்கு வேறு என்ன வேண்டும்?'

'ஆராய்ந்து அறிகிற புத்தி வேண்டும்' 'என்ன சொல்கிறாய்?'

'வெளித்தோற்றம் ஒன்றாக இருப்பதை மட்டும் வைத்து ஒரு முடிவுக்கு வருவது அறி வுடைமை அல்ல.'

'அப்படியானால்?'

நீ கைப்பற்றிய சில ம்பு என்னுடையது. உன் மனைவியுடை யது அல்ல. அவை இர ண்டும் ஒரே மாதிரித் தோன்றினாலும் இது தான் உண்மை. அதைத் தெரிந்து கொள்ளா மல் நீ பிழை செய்து விட்டாய் ஒரு தவறும் செய்யாத என் கண வரைக் கொன்று விட்டாய்'

'அப்படியா? பாண் டியன் யோசனையில் ஆழ்ந்தான். 'உன் கண வனிடம் கைப்பற்றிய சிலம்பைக் கொண்டு வரச் சொல்கிறேன். அதை அவையினருக்கு முன்னால் நீயே சோதித் துக் கொள்ளலாம்'

அத்தனை கோபத் திலும் கண்ணகி தெளி வாகச் சிந்தித்தாள். அதைவிடத் தெளி வாகப் பேசினாள். பாண்டிய நாட்டுச் சிலம்புகள் பெரும் பாலும் முத்துப் பரல் கள் கொண்டவை கள வாடப்பட்ட சிலம் பில் என்ன பரல்கள் இருந்தன?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 93

**ஜனவரி 19, 2022**
அமெரிக்கா உக்ரைனுக்கு 200 மில்லியன் டொலர் பாதுகாப்பு உதவி வழங்கியது.

**ஜனவரி 24, 2022**
நேட்டோ சார்பில் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. கிழக்கு ஐரோப்பாவில் போர்க் கப்பல்கள், விமானங்கள் நிறுத்தப்பட்டன.

**ஜனவரி 25, 2022**
6,000 துருப்புக்கள் மற்றும் 60 ஜெட் விமானங்களை உள்ளடக்கிய ரஷ்யப் பயிற்சிகள் உக்ரைன் எல்லையிலும் மற்றும் கிரிமியாவிற்கு அருகில் ரஷ்யாவிலும் நடந்தன.

**ஜனவரி 26, 2022**
வோஷிங்டன், ரஷ்யாவின் பாதுகாப்பு கோரிக்கைகளுக்கு எழுத்துப் பூர்வ பதிலை முன்வைக்கிறது. மொஸ்கோவின் கவலைகள் பற்றிய "நடைமுறை" விவாதங்களை வழங்கும் அதே வேளையில் நேட்டோவின் "திறந்த கதவு" கொள்கைக்கான உறுதிப்பாட்டை மீண்டும் கூறுகிறது.

**ஜனவரி 28, 2022**
ரஷ்யாவின் முக்கிய பாதுகாப்பு கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறினார்.

**பெப்ரவரி 2, 2022**
கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நேட்டோ நட்பு நாடுகளை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற போலந்து மற்றும் ருமேனியாவுக்கு 3,000 வீரர்களை அனுப்புவதாக அமெரிக்கா கூறியது.

**பெப்ரவரி 4, 2022**
பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில், புடின், உக்ரைனை நேட்டோவில் சேர அனுமதிக்கக்கூடாது என்ற தனது கோரிக்கைக்கு சீனாவின் ஆதரவை வென்றார்.

**பெப்ரவரி 9, 2022**
உக்ரைனில் உள்ள அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா வலியுறுத்தியது.

**பெப்ரவரி 10, 2022**
ரஷ்யாவும் பெலாரஸும் 10 நாட்கள் இராணுவக் கூட்டு நடவடிக்கைகளைத் தொடங்கின.

**பெப்ரவரி 14, 2022**
ரஷ்யா படையெடுக்கும்போது உக்ரைன் மக்கள் தேசியக்கொடிகளை பறக்கவிட்டு தேசியகீதத்தை பாட உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கூறினார்.

**பெப்ரவரி 15, 2022**
உக்ரைன் அருகே பயிற்சிக்குப் பிறகு வீரர்கள் நாடு திரும்புவதாக ரஷ்யா கூறியது. கிழக்கு உக்ரைனில் உள்ள ரஷ்ய ஆதரவு பகுதிகளை சுதந்திர நாடாக அறிவிக்க ரஷ்ய பாராளுமன்றத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையே அதிகரித்துவரும் போர்ச் சூழல் நாளுக்கு நாள் உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவருகிறது. முன்னதாக அமெரிக்கா தரப்பிலிருந்து உக்ரைனுக்கு ஆதரவாக, ரஷ்யாவை எச்சரித்தும் ரஷ்யா பின்வாங்குவதாக இல்லை. இதையடுத்து, கடந்த சில நாட்களுக்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் உக்ரைனில் வசித்து வரும் அமெரிக்கர்களை உடனடியாக உக்ரைனைவிட்டு வெளியேறுமாறு கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளும் உக்ரைனில் வசிக்கும் தங்கள் நாட்டு மக்களை அந்நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறிவருகின்றன. மேலும் உக்ரைனிலுள்ள பல தூதரகங்களும் போர்ச்சூழல் காரணமாக மூடப்பட்டு வருகின்றன.

**பெப்ரவரி 17, 2022**
கிழக்கு உக்ரைனின் பிரிவினைவாதப் பகுதிகளில் தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாநிலங்களின் சண்டை அதிகரித்தது.

**பெப்ரவரி 19, 2022**
புடின் மேற்பார்வையில் ரஷ்யப் படைகள் அணுஆயுத பயிற்சியை மேற்கொண்டன.

**பெப்ரவரி 21, 2022**
கிழக்கு உக்ரைனில் உள்ள ரஷ்யா ஆதரவு தோனேஸ்க் மக்கள் குடியரசு மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசு ஆகியவற்றை சுதந்திர நாடுகளாக புடின் அங்கீகரித்தார். ரஷ்யக் கூட்டரசின் ஆயுதப் படைகள் கிழக்கு உக்ரைனில் உள்ள தோனேஸ்க் பகுதிக்குள் நுழைந்தன.

**பெப்ரவரி 22, 2022**
ரஷ்யாவின் கூட்டமைப்புப் பேரவை நாட்டிற்கு வெளியே இராணுவப் படைகளைப் பயன்படுத்த புடினுக்கு ஒருமனதாக அங்கீ காரம் அளித்தது.

**பெப்ரவரி 24, 2022**
புடின் கிழக்கு உக்ரைனில் "சிறப்பு இராணுவ நடவடிக்கையை" அறிவித்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட உக்ரைன் முழுவதும் உள்ள இடங்களில் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடங்கின.

உக்ரைனிய எல்லைக் காவல் படை ரஷ்யா, பெலாரஸ் உடனான அதன் எல்லைப் பகுதிகள் தாக்கப்பட்டதாகக் கூறியது. இரண்டு மணி நேரம் கழித்து, ரஷ்யத் தரைப்படை உக்ரைனுக்குள் நுழைந்தது. இத்தாக்குதலுக்குப் பதிலளிக்கும் முகமாக, உக்ரைனியத் தலைவர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி இராணுவச் சட்டத்தை அறிவித்தார்.

(தொடரும்)

# தொண்டீஸ்வரத்தைத் தொலைத்துவிட்டோம் கோணேச்சரத்தையேனும் காத்தருள்வோம்

பாடல் பெற்ற திருத்தலமும் தென் கைலாயம் என்றும் தட்ஷண கைலாயம் என்றும் ஈழத்திரு நாட்டில் புராண இதிகாச காலத்திற்கு முற்பட்டதுமானதும் தொன்மை மிக்கதுமான திருக்கோணேஸ்வரத் திருத்தலத்திற்கு வாரா வாரம் தலயாத்திரையாகச் சென்று தரிசிப்போம்.

இன்றைய இளைஞர் நிலைக்கு போதைவஸ்துவுக்கு அடிமையாக இருப்பதற்கு அடிப்படைக் காரணம் இறை வழிபாட்டை, அதன் மகத்துவத்தை நாம் ஊட்டத் தவறியதே.

பணம் பணம் அதைச் சம்பாதிக்க வெவ்வேறு வழிகளைத் தேடித் தேடி அலைகின்றார்களே தவிர நின்று நிதானித்து பிள்ளைகளோடு உரையாடி, நன்னெறியைக் கூறி, நல்ல அறநெறிப் புத்தகம், புராணங்கள், இதிகாசங்களின் வாசிப்பை ஊக்கி, இறை நம்பிக்கையை ஊட்டி, எம் செயல்கள் எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு ஊட்டிவளர்த்தால் இந்தச் சமுதாயம் இவ்வளவு சீரழிவுக்கு வந்திருக்காது என்பது திண்ணம்.

தேசியம் காக்க, தெய்வீகம் வளர்க்க ஒவ்வொரு தனிமனித ஒழுக்கத்துக்குள்ளே தான் இந்தத் தேசம் இருக்கிறது. ஒவ்வொரு தனிமனிதனுடைய ஒழுக்கத்துக்கு உள்ளே தேசத்தின் உயிர் நாடி இருக்கிறது.

அந்த தனிமனிதனின் ஒழுக்கம் சரியாக இருக்க வேண்டும் என்றால் ஆற்றல் இருந்தால் போதாது, அறிவு இருந்தால் போதாது, காசு, பணம் இருந்தாலும் போதாது.



ஆன்மிகச் சிந்தனை ஒவ்வொரு தனி மனிதன் உள்ளத்திலும் இருக்க வேண்டும். நமக்கு மேலே ஒருத்தன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், நம்மை வழிப்படுத்திக் கொண்டிருக்கிறான் என்ற பயமும் இறைபக்தியும் ஒவ்வொரு மனிதருக்கும் இருக்க வேண்டும்.

இன்று இத்தலத்தின் நிலம் பறிபோகும் சூழ்நிலை பத்திரிகையில் தினம் தினம் ஒரு செய்தி. கவலையாய் இருக்கிறது. இந்நிலை மாற வேண்டும்.

பாடசாலைகள் இப்போது புலம்பெயர்ந்தோர் உதவியுடன் மெருகேறி உள்ளது. ஆலயங்களைத் திராவிடத்தி யாலயங்களிலும் தோரணை வாயில்கள் தோன்றத் தொடங்கிவிட்டன.

பல இலட்சம் பணம் செலவழிக்கப்படுகிறது. ஒவ்வொரு பாடசாலையும் வாராவாரம் அல்லது மாதா மாதம் கிடைக்கும் விடுமுறையிலோ ஒரு பேருந்து வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி இப்படியான தலங்களுக்கு அழைத்துச் சென்று வரலாற்று உண்மையோடு விளங்கப்படுத்தினால் பிள்ளைகள் உணர்வுபூர்வமாக வழிபட நன்மை தீமைகளில் பங்குபெற வழிவகுக்கும்.

இன்னும் பல இறை ஆற்றலை நாம் தரிசித்து உணர பேரருள் பெற ஒவ்வொருவரும் தவறாது இணைந்து யாத்திரை செய்வதுடன் வெளிநாட்டில் இருந்து வரும் நம் உறவினர்களுக்கும் எடுத்துக்கூறி அங்கு இருப்பவர்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கணிசமான இடர்களை பல கோணங்களிலிருந்தும் சந்தித்து அவ்வப்போது நேர்ந்த அழிவுகளிலிருந்து மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழுந்து உயிர்ப்புடன் திகழ்வது திருக்கோணஸ்வரத் திருத்தலம் என்பதனை உலக சைவப் பெருமக்கள் அனைவரும் சிவநெறி வளர்க்கும் தெய் வீகத் தலமாக பாதுகாத்து உய்வோமாக.



க.கு.க.சிவபாலன்
தேசஅபிமானி

சிந்திப்போம், செயற்படுவோம், எம் சொத்தைப் பாதுகாப்போம். பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரத்தை தொலைத்துவிட்டுத் துன்பப்படுகின்றோம்.

இந்நிலை கோணேஸ்வரத்திற்கு வேண்டாம். எல்லோரும் ஒன்றாய் இணைவோம் தலயாத்திரை செய்வோம். கோணேஸ்வர திருமுறைகளையும் திருப்புகழையும் தினம் மாலை சந்தியாகாலமான ஆறு மணியளவில் ஓதுவோம்.

திருகோணமலைக்கு யாத்திரையாகச் சென்று தரிசிப்போம். உலக சைவப் பெருமக்கள் அனைவரும் சிவநெறி வளர்க்கும் தலமாகப் பேணிப் பாதுகாத்து உய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கத்திற்கு இணையான கொடுப்பனவு

## அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்

### அரசிடம் தம்மிக்க முனசிங்க கோரிக்கை

(கொழும்பு)

அதிகரித்துள்ள பணவீக்கத்திற்கு இணையான கொடுப்பனவு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையத்தின் பொதுச்செயலாளர் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவினம் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது.

உணவுப் பணவீக்கம் 80 சதவீதத்தினையும் கடந்துள்ளது.

அண்மையில் இடைக்கால வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்ட போதிலும் அதில் எவ்வித ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.

பொருட்கள் மற்றும் எரிபொருள் விலையினை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஓரளவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அதன்படி செப்டெம்பர் மாத இறுதியில் 85 டொலராக இருந்த பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று முன்தினம் சுமார் 92 அமெரிக்க டொலர்களை எட்டியது.

இந்த நிலையில் பிரெண்ட் ரக மசகு எண்ணெயின் விலை செப்டெம்பர் இறுதி வாரத்தில் ஒரு தடவை 82 அமெரிக்க டொலர் வரை விலை சரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவெளை WTI மசகு எண்ணெயின் விலை செப்டெம்பர் இறுதி வாரத்தில் 78 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் 86 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. (நி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடக்கு மாகாணத்தில் 2022 ஆம் ஆண்டிற்கான

"குரு பிரதீபா பிரபா"

விருதினைப் பெற்றுக் கொள்ளும் முல்லை வலயத்தின் சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையின் அதிபர்

திரு.

**நல்லையா அமிர்தநாதன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes



வாழ்த்துவோர்

ஆசிரியர்கள், மாணவர்கள்.

(C-5038)


# தேசியப் பேரவையிலிருந்து விலகினார் ஜீவன்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தேசியப் பேரவையிலிருந்து விலகியுள்ளார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது விலகலினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ம.ராமேஷ்வரன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் தேசியப் பேரவையில் உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 15 சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:HNDA கிளை முகாமையாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு:A/L படித்த பெண்
தொ.இ: B/9921

பிறப்பு: 1986 கிறிஸ்தவம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: வியாபாரம்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/9923

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: சூரி, செவ் 6 இல்
உயரம்: 5'4'
தகைமை/தொழில்: A/L பூசகர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/9925

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: சூரி 4 செவ் 5 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: NCT, QS கட்டட ஒப்பந்தகாரர்
எதிர்பார்ப்பு : அரச தொழில்
தொ.இ: B/9927

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: 101 சூரி 8 செவ் 7 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்.
தொ.இ:G/9908

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 42 சூரி 12 செவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc(Pera), MSc, MBA Computer Engineer
எதிர்பார்ப்பு: சைவபோசனம் Professional Qualified
தொ.இ:G/9914

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 1
கி.பா: 26 சூரி ,செவ் 7 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/9915

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: சூரி, செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA, MAAss. Lecturer
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ:G/9917

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி.பிறைசினி அருள்சந்திரன்

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி. பிறைசினி அருள்சந்திரன் அவர்கள் 06.10.2022 அன்று "இசுருபாய பத்தரமுல்லயில்" அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் 2022 ஆம் ஆண்டுக்கான "குரு பிரதீபா பிரபா" விருது விழாவில் பாராட்டுக்குரியவராகத் தெரிவு செய்யப்பட்டமையையிட்டுப் பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations!



ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஊமையாய் இருக்கும் வரை உலகம் செவிடாய்த்தான் இருக்கும்.

– சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இறைவனுக்கு ஒப்பான ஆசிரியரை ஒருநாள் கௌரவிக்கும் செயலும் ஒரு செயலோ

ஒக்ரோபர் 05 சர்வதேச ஆசிரியர் தினம். எனினும் இலங்கையில் ஒக்ரோபர் 06ஆம் திகதியே ஆசிரியர் தினமாகும்.

தந்தையர் தினம், அன்னையர் தினம் என்ற வரிசைப்பட்டியலில் ஆசிரியர் தினமும் சேர்ந்து கொண்டது.

எப்படியும் வாழலாம் என்ற மேலைத்தேசத்தவர்களின் பண்பாட்டுக்குள் அகப்பட்டு எங்கள் உயரிய பண்பாட்டை இழந்து நிற்கின்ற நாம் வருடத்தில் ஒருநாள ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவது ஒன்றும் ஆச்சரியமல்ல.

என்ன செய்வது ஆசிரியர்களைப் பெயர் கூறி அழைக்கின்ற மேலைத்தேயக் கலாசாரத்துக்குள் கைவைத்த நாம் ஆசிரியர்கள், மாணவர்களை தண்டிக்கக்கூடாது என்ற சட்டத்தினூடு ஆசிரியர்களைக் குற்றக்கூண்டில் நிறுத்தி பெருமை கொண்டாடினோம்.

அதன்விளைவு இன்று மாணவர்கள் பலர் போதைவஸ்துக்கு அடிமையாகி புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆம், மாணவர்களைத் தண்டித்ததற்காக ஆசிரியர்களை மன்றேற்றி கூண்டில் நிறுத்தி, சிறையில் அடைத்தபோது அந்தோ! இது எங்கு போய் முடியுமோ என்று நாம் குரல் கொடுத்திருந்தால், இன்று நம் பிள்ளைகள் ஆசிரியர்களின் அரவணைப்பில் வழிப்படுத்தலில் நல்ல பூக்களாக மலர்ந்து நறுமணம் வீசியிருப்பர்.

கொடுத்து வைக்கவில்லை. ஒழுங்கீனமான கலாசாரங்களோடு வாழுகின்ற நாடுகளில் அறிமுகமான சட்டங்கள் ஒழுக்கத்தை உயிராக மதிக்கின்ற எங்கள் மண்ணிலும் நடைமுறைக்கு வந்தபோது, ஆசிரியரை எதிர்த்துக் கதைக்கின்ற மாணவர்கள் உருவானார்கள்.

என் பிள்ளையைத் தண்டிக்க நீ யார்? என்று கேட்கின்ற நவீனத்துவப் பெற்றோர்கள் பிறப்பெடுத்தார்கள். போதாக்குறைக்கு இவற்றை ஊக்குவிப்பதற்கு ஒரு பெரும் கூட்டம்.

இதன்முடிவு இறைவா! தன் பிள்ளையைத் தண்டித்த ஆசிரியரிடம் நியாயம் உண்டு என ஏற்றுக்கொண்ட பெற்றோர் சமூகம் இல்லாது போயிற்று.

தன்னிடம் கற்ற மாணவனின் உயர்வு கண்டு உள்ளம் பூரித்த ஆசிரியர் சமூகம் மறைந்து போயிற்று.

ஆசானை எந்நாளும் போற்றுகின்ற எங்கள் தமிழ்ப் பண்பாட்டில் இருந்த மாணவர் சமூகம் இப்போது இல்லை என்றாயிற்று.

இந்த இலட்சணத்தில் இன்று நாங்களும் ஆசிரியர் தினம் கொண்டாடுகின்றோம்.

ஓ! உன்னைப் பெற்ற தந்தையும் தாயும் முதியோர் இல்லத்தில். 18 வயதைக் கடந்த பிள்ளை தன் பாட்டில். **மிஸ்ரர்** என்று அழைக்கின்ற மாணவர் கூட்டத்தில் மதிப்பற்று வாழுகின்ற ஆசிரியர் குழாம் என்ற மேலைத்தேய வாழ்க்கையைப் பிரதியெடுத்து நாமும் ஒன்றுகூடி ஒரு நாள் ஆசிரியர்களுக்கு கௌரவம் கொடுக்கின்றோம்.

ஆ! என்னே கொடுமை. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று போற்றிய நம் தமிழ்ப் பண்பாட்டில்,

இறைவனைப் பார்த்து குருவாய் வருவாய் என்று அழைத்த தமிழர் வரலாற்றில் நாமும் ஒரு நாள் கூடி ஆசிரியரைக் கௌரவிக்கின்றோம்.

தேவையா இது. ஆசான் இறைவனுக்கு ஒப்பானவன். ஆக இறைவனை எந்நாளும் மனதிருத்திப் போற்றுவதே எங்கள் உயர்ந்த வாழ்வியலுக்கு உகந்த அருமருந்தாகும்.

# இந்தியாவின் வரிச்சலுகைகளை இலங்கை பின்பற்ற வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம்

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதில் இலங்கை அரசாங்கம், இந்திய வரி முறையைப் பின்பற்ற வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

இந்தியாவின் வரையறுக்கப்பட்ட எச்சிஎல் டெக்னோலொஜிஸ் நிறுவனத்திற்கு 17 வருட வரி விடுமுறை வழங்குவது தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

எந்தவொரு நிறுவனத்திற்கும் நீண்ட வரி விடுமுறைகளை வழங்கும் போது, இந்திய முறையை இலங்கை பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

விசேஷ பொருளாதார மண்டலங்களில் தங்கள் வணிகங்களைக் கண்டறிந்தால் மட்டுமே வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இந்தியா வரிச் சலுகை அளிக்கிறது.

இந்தியாவில் ஐந்து வருட வரி விடுமுறைகள் மட்டுமே வழங்கப்படுகின்றன. அதன்படி, ஐந்தாண்டு வரி விடுமுறை காலாவதியான பிறகு இந்திய அரசு இலாபத்தின் மீது 50 சதவீதம் வரி விதிக்கிறது.

இலங்கையும் இந்த முறையை பின்பற்ற வேண்டும் என்று கபீர் ஹாசிம் கேட்டுக்கொண்டார்.

எச்சிஎல் டெக்னாலஜிஸ் இந்தியாவின் மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றாகும்.

அத்துடன் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து மாத சம்பளம் ரூ. அதன் சில ஊழியர்களுக்கு 500, 000 வேதனம் வழங்கவுள்ளதாகவும், அதனை எதிர்காலத்தில் 10 லட்சமாக அதிகரிக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதேநேரம் 2032 ஆம் ஆண்டளவில் அந்த நிறுவனம் 5,380 இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் என்பதையும் தாம் அறிந்துள்ளதாக கபீர் ஹாசிம் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

### புகையிரத திணைக்கள காணிகளை

## சட்டவிரோதமாக உபயோகிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை - பந்துல

(கொழும்பு)

புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளை சட்ட விரோதமான முறையில் உபயோகிப்போர் மற்றும் அக் காணிகளில் குடியிருப்போர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் இல்லாமல் போயுள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, ஆளும் கட்சி உறுப்பினர் கோகிலா குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளில் குத்தகை ஒப்பந்தம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பது மற்றும் அதனை உபயோகிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான சொத்துக்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக விசேட நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## நாட்டில் இன்றும் நாளையும் சுழற்சி முறையில் மின்வெட்டு

(கொழும்பு)

நாட்டில்இன்றும்நாளையும் சுழற்சி முறையில் மின்சாரத்தை துண்டிப்பது தொடர்பில், மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, ஏதிர்வரும் இரு தினங்களில் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் இரண்டு மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

A,B,C,D,E,F,G,H,I,J, K,L,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு பகல் வேளையில் ஒரு மணித்தியாலமும், இரவு வேளையில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது. (ம-7)

## விஜயதாசவுக்கு அவதூறு ஏற்படுத்திய ஆசிரியருக்கு 2 வருட கடூழிய சிறை

(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கு அவதூறு ஏற்படுத்திய குற்றத்தை ஒப்புக் கொண்ட மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவருக்கு 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையை உயர்நீதிமன்றம் விதித்துள்ளது.

இதுதவிர, 3 இலட்சம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் தமக்கு அவதூறு ஏற்படுத்தியதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உயர்நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுமீதான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் குறித்த ஆசிரியருக்கு 2 வருட கடூழிய சிறை விதிக்கப்பட்டது. (ம-7)

## அஞ்சல் தினத்தை முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை தபாலக அணிக்கும் வல்வெட்டித்துறை தபால்க அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ 20-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அனுராத பெர்னாண்டோ கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர் களாக பருத்தித்துறை தபாலதிபர் ஆ. அருளனந்த சோதி வல்வெட்டித்துறை தபாலதிபர் ஆர். ரகுபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

## சுற்றுலா எரிபொருள் அட்டை அறிமுகம்

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலா எரிபொருள் அனுமதி அட்டையை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று Dialog Axiata நிறுவனத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இந்த சுற்றுலா எரிபொருள் அனுமதி அட்டை மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டில் தற்போதுள்ள எரிபொருள் ஒதுக்கீட்டு முறையைத் தவிர்த்து, அவர்களின் தேவைக்கேற்ப எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சுற்றுலா எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் கொள்வனவு செய்வதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த வசதியை நாடளாவிய ரீதியில் உள்ள 300 Ceypetco மற்றும் LIOC பெற்றோல் நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் [illegible] நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** மகா [illegible] ஆகிய இடத்தில் மின்சாரம் தடைப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான தீர்மானம்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான தீர்மானத்தை நிராகரிக்கின்றோம் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தற்போது முன்வைக்கப்பட்டுள்ள நியாயமற்ற தீர்மானத்தை முற்றாக நிராகரிப்பதற்கான எமது முடிவை வெளிப்படுத்தும் வகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த நாங்கள் இந்த ஊடக அறிக்கையினை வெளியிடுகின்றோம்.

ஏனெனில் இத் தீர்மானமானது தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ வீரர்களினால் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் ஊக்குவிக்கும் விதமாகவே அமைந்துள்ளது. தமிழர்களாகிய நாம் பல்லாண்டு காலமாக மிகப் பெரும் இழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்துள்ளோம்.

இந்தத் தீர்மானமானத்தினூடாக ஆகக்குறைந்தது நீதியாவது கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால் இந்தத் தீர்மானத்தால் எங்களின் நம்பிக்கை பொய்த்துப் போயுள்ளது.

இந்தத் தீர்மானம், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்கள் பற்றிய எந்தப் புரிதலையும் வெளிப்படுத்தவில்லை. ஆகக் குறைந்தது தமிழ் மக்கள் எதிர்கொண்ட துன்பங்கள், வேதனைகளை கூட பிரதிபலிக்கவில்லை.

இந்தத் தீர்மானம் பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வந்த ஸ்ரீ லங்கா அரசாங்கங்களினால் தமிழர்கள் எதிர்கொண்ட கொடுமைகளுக்குத் தீர்வு வழங்கத் தவறிவிட்டது. இத் தீர்மானம் குற்றம் இழைத்தவர்களை பொறுப்புக் கூற வைப்பதற்குப் பதிலாக, அவர்களின் சர்வதேச குற்றங்களை வெள்ளை அடிப்பதுடன் அவர்களை பிணை எடுப்பதாகவே அமைத்துள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-33)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நேற்று விஜயதசமி விழா வழிபாடுகள், ஏடுதொடக்கல் மற்றும் பழைய மாணவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன. (படம்-கணேசலிங்கம்)

# ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் உரத்தின் அளவு போதாது

## பூநகரி விவசாயிகள் சுட்டிக்காட்டு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு பெரும் போக நெற்செய்கைக்கான யூரியா உரம் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமானது.

பூநகரி கமநல சேவைக் குட்பட்ட விவசாயிகளுக்கு பூநகரி கமநலசேவை நிலையத்தில் யூரியா உரம் வழங்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு 8கிலோ 400 கிராம் வீதம் யூரியா வழங்கப்பட்டது. எனினும் ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 40 கிலோ தேவையான நிலையில் 8 கிலோ வீதம் மூன்று தடவை வழங்குவது பெரும்போக செய்கைக்கு போதாது என விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள் ளனர். (4-316)

## சுகாதாரப் பரிசோதகர் மீது தாக்குதல்

(தருமபுரம்)

கண்டாவளை சுகாதார பணிமனையின் கீழ் பணியாற்றும் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கிளிநொச்சி சென்று மீண்டும் திரும்பும் வழியில் பரந்தன் பகுதியில் வைத்து சிலரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் காயமடைந்த சுகாதாரப் பரிசோதகர் கிளிநொச்சி மருத்துவமனை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (4-316)

# வவுனியா வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா வேப்பங்குளத்தில் உள்ள தனியார் காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட மலசலகூடத்தினை புனரமைக்கும் செயற்பாட்டினை நேற்று முன்தினம் மேற்கொண்ட போதே குழியில் இருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது 60 மில்லி மீற்றர் குண்டு ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் சிறிய ரக மிதிவெடி ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-299)

# இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட தோட்டச் செய்கையின் உற்பத்திப் பொருட்களின் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இதன் போது மன்னார் இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா நடைபெற்றது. பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

இரணை இலுப்பை குளத்தைச் சேர்ந்த விவசாயிக்கு விவசாயத் திணைக்களம் வழங்கிய துவல் நீர்ப்பாசன உபகரணத் தொகுதியின் உதவியுடன் விவசாய திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் வெங்காயம்,பூசனிக்காய் , கச்சான் கடலை,மிளகாய் உள்ளிட்டவையும் அறுவடை செய்யப்பட்டன. (4-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 260 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 280 | 250 |
| தக்காளி | 260 | 260 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 260 | 200 |
| கோவா | 420 | 400 | 400 | 450 |
| கரட் | 350 | 380 | 400 | 450 |
| பூசணி | 160 | 160 | 160 | 200 |
| புடோல் | 200 | 200 | 160 | 240 |
| வாழைக்காய் | 200 | 160 | 140 | 140 |
| சின்ன வெங்காயம் | 420 | 400 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 450 | 350 | 450 | 450 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 160 | 250 | 300 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 650 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 500 | 800 |
| போஞ்சி | 600 | 400 | 420 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 280 | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 180 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 250 | 280 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 380 | 320 | 450 |
| முள்ளங்கி | 160 | 160 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | 160 | 140 | 100 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிவாயு விலை...

அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ எரிவாயு கொள் கலன் ஒன்றின் விலை 271 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 4,280 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், 5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு கொள்கலன் விலை 107 ரூபாயி னால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,720 ரூபாயாகும்.

மேலும், 2.3 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலனின் விலை 48 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 800 ரூபாயாக குறைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம-7)

## வயோதிபர்களிட...

கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை நேரம் கரவெட்டி, மாலைச்சந்தியில் உள்ள வீடு ஒன்றில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் புகுந்த இரண்டு கொள்ளை யர்கள் வயோதிபத் தம்பதியினரை கத்தி முனையில் அச்சுறுத்தி விட்டு அவர் களிடம் இருந்த ஐந்து பவுண் தங்க நகையை கொள்ளையிட்டுச் சென்றுள் ளனர்.

இச்சம்பம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர். (ம-7,60)

## இலங்கையின்...

வடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே ஐ.நா.ஆணையாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொரு ளாதாரக் குற்றங்கள் என்ற சொல்லை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என் றும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை முன்னோக்கி நகர்த்துவ தற்கு இடமளிக்காமல் பலவந்தமாக இலங் கையை நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்ப தாக அலி சப்ரி கடுமையாக சாடியுள்ளார்.

பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கைக்கு கல்வி கற்பிப்பதற்கான நிபுணத்துவம் மனித உரிமைகள் பேர வைக்கு இருந்தாலும் அது குறித்து சர்வ தேச நாணய நிதியம், உலக வங்கி மற் றும் நிபுணர்களுடன் இலங்கை கலந்துரை யாடி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இலங்கைக்கு...

தால், அதிலிருந்து மீட்பதற்காக சர்வதேச கடன் வழங்குநர்கள், கடன் நிவாரணம் வழங்க வேண்டும் என சர்வதேச மன் னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானியாவைத் தளமாக கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று விடுத் துள்ள அறிக்கையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

பல மாதங்களாக, இலங்கை கடுமை யான பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது.

51 பில்லியனுக்கும் அதிகமான மொத்த வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பது குறித்து அரசாங்கம் அதன் பிரதான கடன் வழங்குநர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர் உதவிக்காக சர்வதேச நாணய நிதியத் துடனான ஆரம்ப உடன்படிக்கையை எட்டியுள்ளது.

கடன் வழங்குநர்கள் "தங்கள் மனித உரிமைகள் பொறுப்புகள் மற்றும் இலங் கையின் மனித உரிமைகள் கடப்பாடுகள், மறுசீரமைப்பு என்பனவற்றை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

அத்துடன் கடனை திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளில் மாற்றம் உட்பட இலங் கைக்கான கடன் தொடர்பில் எந்தவொரு எதிர்கால அர்ப்பணிப்புகளையும் உறுதி செய்ய வேண்டும்" என வலியுறுத்தி யுள்ளது. (ம-7)

## யாழ். பல்கலையி...

பல்வேலு பிரிவில் பல மாணவர்கள் பட்டத்தினைப் பெறவுள்ளனர்.

பட்டமளிப்பினை முன்னிட்டு யாழ்ப் பாணம் பல்கலை வளாகத்தினை சுற்றி ஒரு வழிப்பாதை போக்குவரத்து ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கைக்கு எதி...

நர்டுகளின் தலையீடு தொடர்பான 8 ஆவது சரத்துக்கு எதிராக செயற்பட்டு நிற்கும் எனவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ். நகரில்...

அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ். கொட்டடியைச் சேர்ந்த றொபிக்ஷன் (வயது 22) என்ற இளை ஞனே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமாகியுள்ளதோடு மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

விபத்து தொடர் பில் யாழ்ப்பாண பொலிஸார் மேல திக விசாரணை களை மேற்கொண் டுள்ளனர். (ம-7,33)

## இலங்...

ஜனாதிபதி சட்டத் தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

மனித உரி மையை ஆயுத மாகப் பயன்படுத்தி இலங்கையை வாழ் நாள் முழுவதும் கட் டுப்படுத்த அந்நா டுகள் முயற்சிப்ப தாக அலி சப்ரி தெரி வித்தார்.

அமெரிக்கா, இங் கிலாந்து, கனடா, வடக்கு அயர்லா ந்து, வடக்கு மசிடோனியா, ஜேர்மன், மலாவி மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடு களை உள்ளடக்கிய கோர் குழு அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மானிப்பாயில்...

திகதி இரவு 7 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரபல பாடசாலை ஒன் றில் கற்பிக்கும் ஆசிரியர் வீடு திரும்பிய போதே இந்த வழிப்பறிக் கொள்ளை கத் திமுனையில் இடம்பெற்றது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஊரெழு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 23, 25 மற்றும் 42 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடி மையாகிய சந்தேக நபர்கள் மூவரும் பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களிடமிருந்து நான்கரை தங்கப்பவுண் சங்கிலி மற்றும் கொள் ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக் கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-7,33)


# வேலைவாய்ப்பு

- அலுவலக செய்தியாளர் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள், சிங்கள மொழித் தேர்ச்சி)

**தகைமை**

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- 25 வயதுக்கு மேல்
- யாழ்.நகரத்தில் இருந்து 5 KM தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடம்

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் 07.10.2022 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

முகாமையாளர்
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



மஹஜன சம்பத
திகதி 2022/10/05
சீட்டிழுப்பு இலக்கம் 4899
H 9 1 5 3 1 3
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.05
சீட்டிழுப்பு இலக்கம் 208
மிதுனம் 08 22 23 46 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1247
U 06 01 56 58 65

கொவிசெத
திகதி 2022.10.05
சீட்டிழுப்பு இலக்கம் 3141
L 05 19 41 44
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.10.05
சீட்டிழுப்பு இலக்கம் - 929
B 21 63 66 71

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1354
ரிஷபம் 5 6 3 3 5 1
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1700
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.10.05
ரூ. 3,818,820/-
20 27 29 67 C

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.10.05
சீட்டிழுப்பு இல: 4035
ரூ. 4,571,300/-
27 28 39 72 E

ராசி
திகதி 2022-10-05
வெற்றி வாரம் 3586
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,476,417/-
21 24 32 56
வர்ணம் பச்சை
ரூ. 8,850,860/-

26
L 27 29 30 40 74
சீட்டிழுப்பு வாரம் 1050
பச்சை
2022.10.05 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 267,275,477.80
011-2 333 546-47
Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1859
சீட்டிழுப்பு திகதி 2022-10-05
08 16 58 61 J
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 36,023,112/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1874
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.05
தினம் புதன்கிழமை
V 07 25 48 74
ரூ. 2,883,480/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிறைந்தவர்க்காய்

## 31வது நாள் நினைவு



## குழந்தைவேலு இராஜகுலேந்திரா

(சிரேஷ்ட சட்டத்தரணி)

அன்புடையீர்,

*ஓயாது உழைத்தல்- பிறர்க்கு இல்லையெனாது அளித்தல்*
*தலைசாயாது பிழைத்தல் - பிறர்மனம் கோணாது நடத்தல்*
*வருவிருந்தை தன்னில் ஒருவராக்கல்*
*இவையே ராஜாவின் தொழில் அவர் வழி நிற்பதே நமக்கு எழில்*

ராஜா நினைவு மீட்ட 08.10.2022 அன்று 11.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் வருக மதிய உணவில் இணைக

**நன்றி நவிலல்**

இதயம் பிழியும் இன்னல் வேளையில் இடும்பை தாங்க ஆறுதல் தந்தோர், தேறுதல் ஊட்டியோர், சொன்ன மனதுடன் அன்னம் அளித்தோர், அல்லும் பகலும் கூடவிருந்தோர், முன்னும் பின்னும் வேலைகள் பார்த்தோர், கருமங்கள் பலவும் இயற்றி நின்றோர், அனைவருக்கும் சொன்னோம் நன்றி

சோனாவாரி

இல.34/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு-06 (13009)

077 022 4563
077 922 5100

அன்புடன் அழைக்கும்
குடும்பத்தார்

---

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ 42 வயது செவ்வாய் குற்றமற்ற சொந்தமாக தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (13014)

தொடர்புகளுக்கு

**077 905 8615**
(வைபர் & வாட்ஸ்அப்)

---

## இலவச விசா வாய்ப்பு

### அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4921)

!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

**V2 TRAVELS** 0768226244 0768226240

---

## கார்/வான் வாடகைக்கு உண்டு

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.

**RSP Rent a Car**
**077 898 9691** (13018)

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS

**0777-068-777**

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13018)

**076 825 7716** (ஆகாஸ்)

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,
021 567 1532

---

## காணி விற்பனைக்கு

சங்கானை தேவாலய வீதியில் அமைந்துள்ள (சங்கானை நகரத்தில் இருந்து 500M) 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**077 038 9787**
(தரகர்கள் தேவையில்லை) (13010)

---

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

### பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(13015)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 241 7589**

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
04 . 12 . 1983

மறைவு
08 . 09 . 2022

கடந்த 08.09.2022 வியாழக்கிழமை சிவபதமடைந்த

## அமரர் ரவீந்திரராசா அசோக்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (07.10.2022) வெள்ளிக்கிழமை காலை 05.00 மணியளவில் வியாபாரிமூலை தெணியம்மன் கோவிலடி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று மறுநாள் 08.10.2022 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

வீரபத்திரர் கோவிலடி,
பன்னயம்பதி,
பருத்தித்துறை. (C-5037)

குடும்பத்தினர்
077 665 9235

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.